2. தகவல் கோரல்

திருவள்ளூர் மாவட்டம், டெங்கு காய்ச்சல் வராமல் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் அறிகுறியால் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 7 பேர் உயிரிழப்பு ஏற்பட்டு, இன்றைக்கு டெங்கு காய்ச்சலால் மிகப் பெரிய பீதி ஏற்பட்டு, குறிப்பாக திருவள்ளூர் தொகுதியிலே உள்ள திருவாலங்காட்டில் மட்டும் காவேரிராஜபுரத்தில் 4 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அம்மா அவர்களுடைய அரசு டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு, நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கைகளை, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக எடுத்து வருகின்ற காரணத்தினால், தாங்கள் குறிப்பிடுகின்ற திருவள்ளூர் மாவட்டத்திலே டெங்கு காய்ச்சல் போன்ற அனைத்து காய்ச்சல்களும் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காவேரிராஜபுரம் பகுதியிலே மொத்தம் 58 பேர் காய்ச்சல் காரணமாக அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அதிலே 8 பேர் மட்டும்தான் அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். அவர்களும் நல்ல முறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். மீதி அத்தனை பேரும் குணமடைந்து நல்லபடியாக திரும்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு தொடர் நடவடிக்கைகளை, கண்காணிப்பு நடவடிக்கைகளை உள்ளாட்சித் துறை, மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து மிக வேகமாக, துரிதமாக, சிறப்பாக எடுத்து வருகிறது. நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட அமைச்சர் அவர்களும் அனைவருமே திருவள்ளூர் மாவட்டத்திற்கு தொடர்ந்து ஆய்வுக்குச் சென்று, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, மாவட்ட ஆட்சியரோடு கலந்து, பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர், எங்களுடைய அரசு செயலாளர் உள்ளிட்ட அத்தனை பேருமே அங்கேயே முழுமையாகத் தங்கி, முழு வீச்சிலே, போர்க்கால அடிப்படையிலே அங்கே பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே தற்போது காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அனைத்து காய்ச்சல்களும் டெங்கு காய்ச்சல் அல்ல. மர்மக் காய்ச்சல் என்ற வார்த்தைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே இடம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 23 வகையான வைரஸ் காய்ச்சல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். 23 வகையான வைரஸ் காய்ச்சலில், அது என்ன காய்ச்சல் என்பதைக் கண்டறிந்து, குணப்படுத்தக்கூடிய அத்தனை வசதிகளும், மருந்து, மாத்திரைகள், இரத்தக்கூறுகள், இரத்தம் போன்ற தேவையான அத்தனை வசதிகளும் அரசு மருத்துவமனைகளிலே தயாராக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-55

தாங்கள் குறிப்பிட்ட பகுதியிலே 4 பேருக்கு மட்டும்தான் பரிசோதனையிலே டெங்கு காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 58 பேருக்கு காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் உள்ளது. அந்த 58 பேரிலே டெங்கு காய்ச்சல் 4 பேருக்கு மட்டும்தான் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. உள்ளாட்சித் துறை மூலமாக 526 கிராம ஊராட்சிகளிலே, 10 பேரூராட்சிகளிலே,

2016 ஆகஸ்ட் 31] [*டாக்டர் சி. விஜய பாஸ்கர்*]

5 நகராட்சிகளிலே நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் Mass Screening Programme *போன்ற அனைத்துப் பணிகளும் வேகமாக, துரிதமாக நடைபெற்று வருகின்றன. தற்பொழுது களத்திலே, நேற்றைக்குக்கூட நானும் திருவள்ளூரிலே இருந்தேன். அதற்கு முன்தினம் இருந்தேன். வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை உள்ளிட்ட அனைத்து தினங்களிலும் நேரடியாக தொடர்ந்து ஆய்வுக்குச் சென்று கொண்டிருக்கின்றோம். இப்பொழுது அங்கு பதட்டம் இல்லை; பீதி இல்லை. உறுப்பினர் அவர்களும் பதட்டத்தையும், பீதியையும் கிளப்ப வேண்டியதில்லை. பொது மக்களுடைய நலன் காக்கக்கூடிய அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன், உட்காருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *திருவள்ளூர் மாவட்டத்திலே கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முழுவீச்சிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களும் கட்டுக்குள்ளே இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேளுங்கள். தகவல் கோரல் என்ற முறையில் கேட்கிறேன் என்று சொன்னீர்கள். அதனால் நான் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்) சரி, பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-8-2016 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித்*

தலைவர் தளபதி அவர்கள் நேரடியாக திருவள்ளூர் தொகுதிக்கு வந்து, மாவட்ட மருத்துவமனை மற்றும் திருவாலங்காடு பகுதியிலே ஆய்வு செய்து, இறந்துபோன அந்தக் குழந்தைகள் குடும்பத்திற்கு நிதியுதவி அளித்து, அன்றைக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார். பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்திற்கு அரசின் வாயிலாக அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படுமா? இன்றுவரை 7 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்ற ஆதாரம் என்னிடம் இருக்கிறது. யுவராஜ், மோகன், மோகன்குமார் உள்ளிட்ட அனைத்து குழந்தைகளும் உயிரிழந்திருக்கிறார்கள். அங்கு டெங்கு உள்ளது என்று அமைச்சரே ஒத்துக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இங்கே பாருங்கள். இதெல்லாம் தேவையில்லாதது. ஆதாரம் இல்லாமல் நீங்கள் இதுமாதிரியெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, அப்படியெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) முழு விவரத்தோடு சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் நிதி கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிராஜபுரம் பகுதியிலே, திருவாலங்காடு ஒன்றியத்திலே நானே நேரடியாகச் சென்றேன். சுகாதாரத் துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அத்தனைபேர்களும் அங்கே சென்றோம். அதிலே, இறந்தவர்களிலே மோகன் என்பவருக்கு மட்டும் டெங்கு காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சொல்லுகின்ற அந்தப் பட்டியல் என்னிடத்திலும் இருக்கின்றது. ஒருவர் மஞ்சள்காமாலையிலே இறந்திருக்கிறார். இன்னொருவர் lepto virus என்ற அந்தத் தொற்று நோயினால் இறந்திருக்கிறார். என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையிலே எந்தத் தொற்று நோயாக இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தக்கூடிய ஸ்திரத் தன்மையோடு மக்கள் நல்வாழ்வுத் துறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) டெங்கு காய்ச்சல் கட்டுக்குள்ளே இருக்கிறது. அரசும் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதனை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)